DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.37/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 22 | நாள் | : | 07.02.2025 |
| பெயர் | : | சேதுலட்சுமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 07th day of February 2025.**

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது புளியங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சிவகிரி காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 10.09.2019 ம் தேதி சிவகிரி காவல்நிலைய கு.எண்.393/2019 வழக்கில் இறந்துபோன குழந்தை கவினா என்பவரை சடலக்கூராய்விற்காக மருத்துவமனைக்கு சென்று மருத்துவ அலுவலருக்கு அடையாளம் காட்டி சடலக்கூராய்வு முடித்து உறவினரிடம் ஒப்படைக்க திரும்பும்படி உதவி ஆய்வாளர் உத்தரவின்பேரில் நான் காலை 10 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று வேண்டுகோள் கடிதம் கொடுத்தபோது மூத்த

மருத்துவ அலுவலர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். தனியார் வாகனத்தின்மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று 12.30 மணிக்கு சடலத்தை ஒப்படைத்து சடலக்கூராய்வு முடித்து உறவினர்களிடம் ஒப்படைத்து நிலையம் வந்தேன். 12.09.2019 அன்று பிரேத விசாரணை அறிக்கையை நடுவரிடம் ஒப்படைத்து திரும்ப பிறப்பித்த உத்தரவின்பேரில் நடுவரிடம் 23.00 மணிக்கு ஒப்படைத்து நிலையம் திரும்பினேன். சடலக்கூராய்வின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகள் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த நிலையில் அதை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைத்து நிலையம் திரும்பி அறிக்கை சமர்ப்பிக்கும்படி உதவியாளரின் உத்தரவின்பேரில் 18.09.2019 அன்று ஒப்படைத்து நிலையம் திரும்பினேன். எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகள் அ.சா.ஆ. 19 முதல் 21 ஆகும். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளரும் பின்னர் ஆய்வாளரும் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

12.09.2019ம் தேதி எனக்கு பிரேத விசாரணை அறிக்கையை நடுவரிடம் ஒப்படைத்து திரும்படி வழங்கிய கடவுச்சீட்டு பற்றிய விவரங்களை உதவி ஆய்வாளர் விசாரணையிலோ பின்னிட்டு விசாரித்த ஆய்வாளர் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கை எங்கு வைத்து யார்

யார் முன்னிலையில் நடந்தது என்று எனக்கு தெரியும். பிரேத பரிசோதனையின்போது ஆய்வாளர் உடனிருக்கவில்லை. அப்போது பஞ்சாயத்தார்கள் யார்யார் உடனிருந்தார்கள் என்று ஞாபகமில்லை. பிரேத விசாரணை அறிக்கையை எங்கு வைத்து பெற்றுக்கொண்டேன் என்று எனக்கு திருநெல்வேலியில் வைத்து ஒப்படைக்கப்பட்டது. 12.09.2019 அன்று ஒப்படைக்கப்பட்டது. 13.09.2019 அன்றுதான் கடவுச்சீட்டு நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை உதவி ஆய்வாளர் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார். என்னை 09.09.2019 அன்று விசாரித்தார் என்றால் சரிதான். அன்றைய விசாரணையில் சங்கரன்கோவில் மருத்துவ அலுவலர் அங்கு வைத்து சடலக்கூராய்வு செய்ய முடியாது என்றும் இறப்பில் சந்தேகம் இருப்பதால் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படியாக கூறியதை நான் உதவி ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை. சங்கரன்கோவில் அரசு மருத்துவர் கடவுச்சீட்டை பெற்றுக் கொண்டு அதில் மேற்குறிப்பு செய்து தரவில்லை. உதவி ஆய்வாளரும் ஆய்வாளரும் சங்கரன்கோவில் அரசு மருத்துவ அலுவலரிடம் ஆலோசனைகள் மேற்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சடலக்கூராய்வு செய்யும் வசதி உள்ளது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வேறு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல அரசு வாகனங்கள் உள்ளது என்றால் சரிதான். தனியார் வாகனம் மூலம் எடுத்துச் செல்வதற்கு

தனிப்பட்ட காரணம் ஏதும் இல்லை. சங்கரன்கோவிலில் உள்ள தனியார் ஆம்புலன்ஸ் யாருக்கு சொந்தமானது என்று தெரியாது. அதை யார் அழைத்து வந்தார்கள் என்றும் தெரியாது. உதவியாளர்தான் ஏற்பாடு செய்தார். தனியார் வாகன ஓட்டுநரை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். 10.09.2019 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டதாகவும், கடவுச்சீட்டு கொடுக்கப்பட்டதாகவும் நான் சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு சென்றதாகவும் பின்னர் அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கூறுவதும் மருத்துவ அலுவலருக்கு நான் அடையாளம் காட்டியதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து உடல் உள்ளுறுப்புகளை பெற்று தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. கொலை வழக்குகளில் எதிரியை இணைக்க வழக்கமாக தயாரிக்கப்படும் ஆவணங்களில் ஒருவரை சாட்சியாக நியமிக்க வேண்டுமென்பதற்காக என் பெயரை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன் என்றும் உண்மையில் நான் எந்த பணியையும் மேற்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆவணங்களுக்கு ஏற்ப பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் ஆய்வாளர் வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.02.07 17:33:10 +0530